# பாதையில் பள்ளங்கள் நீர்க்குழாய் உடைந்தது


கோலாலம்பூர், ஏப். 17-

கோலாலம்பூர் செந்தூலில் உள்ள ஜாலான் செந்தூல் பசாரில் உள்ள நீர்க்குழாய் ஒன்று உடைந்து போனதால் பாதையில் பள்ளங்கள் ஏற்பட்டது.

பாதையில் ஏற்பட்ட பள்ளங்கள் மேலும் பெரிதாகலாம் என்பது மோட்டார் சைக்கிளோட்டிகளின் அச்சமாக இருக்கிறது.

நான்கு வழி பாதையானது இரு வழி பாதையாக சுருங்கியது. பாதையில் ஏற்பட்ட குழிகளுக்கு பரிகாரம் காணப்படவில்லை என்று செந்தூல் குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

திடீரென்று பாதையில் பெரிய குழி ஏற்பட்டால் நிலைமை மேலும் மோசமாகி விடும். ஜாலான் செந்தூல் பசாரில் பாதையின் தரத்தை உயர்த்தும் பணிகளால் இங்குள்ள போக்குவரத்து மோசமாகி உள்ளது.



பாதையில் குழி என்பதால் கம்போங் பாருக்கு போகும் பாதை ஒரு வழி பாதையாக குறுகியது.

பரபரப்பான நேரங்களில் இங்கே போக்குவரத்து நெரிசல் கடுமையாக இருந்தது. இந்த ஒரு வழிப் பாதையில் பல பகுதிகளிலிருந்து வரும் கார்களால் நிலைமை ஒரு குழப்ப நிலைக்கு ஆட்படலாம்.

இங்குள்ள மக்களுக்கு இவை ஓர் இடையூறாக இருப்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பழுதுபார்க்கும் பணியினை துரிதப்படுத்த வேண்டும் என்று எமிலி என்ற 26 வயது வழக்கறிஞர் கேட்டுக் கொண்டார்.

பரிகார நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு குத்தகையாளர் ஒருவர் கேட்டுக் கொண்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

எனினும் பிரத்தியேக வடிவம் கொண்ட நீர்க் குழாய்கள் தேவைப்படுகிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட குத்தகையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.